# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்:24.09.2018

காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழக மேலாண்மையியல் நிறுவனத்தின் சார்பில் ஏற்பாடு செய்த "வாசிப்பே வளர்ச்சிக்கு வழிவகுக்கும்" என்ற தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கம் இன்று (24.09.2018) நடைபெற்றது.




கருத்தரங்கினை தொடங்கி வைத்து தலைமையுரையாற்றிய பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.இராஜேந்திரன் அவர்கள், "புத்தகங்கள் வாசிப்பது எவ்வாறு பல்வேறுபட்ட பண்புகளை வளர்த்து ஒருவரின் பார்வையை விசாலமாக்குகிறது" என்பதை விளக்கி பேசினார். தமிழர்களின் நாகரிகம், பண்பாடு மற்றும் திறமைகளின் தொகுப்பு தான் சங்க இலக்கியங்கள் என்றும், அவற்றை நாம் ஆழ்ந்து படிக்க வேண்டுமென்றார். புத்தகங்கள் வாசிப்பதன் மூலம் ஒரு சிறந்த அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க முடியும் என்றார். மாணவர்களிடையே இயற்கையாகவே படிக்க வேண்டுமென்ற ஆர்வம் உள்ளது, சிறந்த நூல்களை தெரிவு செய்து அவற்றை படிக்க மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். இளைஞர்கள் அலைபேசியில் அதிக நேரத்தை செலவிடுவதை தவிர்த்து, நூல்களை வாசிப்பதில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். கற்றல் என்பது வாழ்நாள் முழுவதும் தொடர கூடிய ஒரு நிகழ்வு. நூல்கள் மனித நாகரிகத்தின் அடையாளமாக திகழ்கின்றன. அறிவு வளர்ச்சி என்பது உடனே நடக்க கூடியதல்ல. ஆதலால் தொடர்ந்து நல்ல நூல்களை படிப்பதன் மூலமே அவ்வளர்ச்சியை அடைய முடியும் என்றார். வாழ்வின் மாண்புகளுக்காகவும், தலைமைப்பண்பை வளர்த்து கொள்ளவதற்காகவும் வாசிப்பது அவசியம். பொழுதுபோக்கிற்காக மட்டும் வாசிக்காமல் ஒரு புரிதலோடு ஆக்கபூர்வ சிந்தனையை வளர்க்கும் வகையில் நமது வாசித்தல் இருத்தல் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

எழுத்தாளர், பேச்சாளர் மற்றும் மனிதவள மேம்பாட்டு பயிற்றுநர் ஈரோடு கதிர் இக்கருத்தரங்கில் சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில் புத்தகங்களை வாசிப்பதன் மூலமே

சிறந்த சிந்தனையாளர்களை உருவாகமுடியும், சிந்தனையாளர்கள் தான் சிறந்த தலைவர்களாக வரமுடியும் என்றார். வாசிக்கும் பழக்கத்தை ஒவ்வொரும் தாங்களாகவே வளர்த்து கொள்ள வேண்டும் என்றார். தொடர்ந்து படித்தவர்கள் மட்டுமே சிகரத்தின் உச்சியை அடைந்துள்ளார்கள் என்பதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது. எனவே மாணவர்கள் நூலகத்திற்கு சென்று படித்து அறிஞர்களின் கருத்துகளை அறிந்துகொள்வதோடு மட்டுமில்லாமல் அனைத்து துறைசார்ந்த தற்போதைய நிகழ்வுகள் பற்றிய செய்திகளை தெரிந்துகொள்வது மிகவும் அவசியம் என குறிப்பிட்டார்.

மற்றொரு சிறப்பு விருந்தினர் எழுத்தாளர் ஆத்மார்த்தி அவர்கள் ‘‘படைப்பாளனாக வேண்டுமென்றால், பழமையை ஆழ்ந்து படிப்பதன் மூலம் புதுமையை படைக்கலாம்’’ எனக்கூறினார்.

விழாவில் மேலாண்மையியல் புல முதன்மையர் பேராசிரியர் வி.பாலச்சந்திரன் வாழ்த்துரை வழங்கினார். அழகப்பா மேலாண்மையியல் நிறுவன இயக்குனர் (பொ) முனைவர்.எஸ்.ராஜமோகன் வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் சந்திரமோகன் நன்றியுரை வழங்கினார்.

இவ்விழாவினை அழகப்பா மேலாண்மையியல் நிறுவனப் பேராசிரியர்கள் மற்றும் புத்தக வாசிப்பாளர்கள் சங்கம் மற்றும் எம்.பி.ஏ மாணவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு

பதிவாளர்